## சில வரிச் செய்திகள்

# ஹெல்மெட் அணிந்தால் தக்காளி இலவசம்!




தர்மபுரி,ஜூலை.18-

போக்கு வரத்து விதிகளை கடைப்பிடித்து இரு சக்கர வாகனகங்களில் ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கு வழக்கறிஞர் ( மாட்லாம்பட்டியைச் சேர்ந்த சுபாஷ்) ஒருவர் தேடி தேடி இலவசமாக தக்காளி வழங்கியதாக வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தர்மபுரி நான்கு ரோடு சிக்னலில் பைக்கில் ஹெல்மெட் அணிந்து போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றுபவர்களுக்கு தர்மபுரி மாவட்டம் மாடலாம்பட்டி பகுதியைச் சேர்ந்த சுபாஷ் என்பவர் ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கு தக்காளி இலவசமாக வழங்கினார். சாலை விதிகளை மதிப்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக இதனை செய்ததாக அவர் கூறினார்.

### அமெரிக்கா -அலாஸ்கா பகுதியில்

# சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!



அமெரிக்கா,ஜூலை.18-

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு சுனாமி எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் அலாஸ்கா பகுதியில் நேற்று முன்தினம் 7.4 ரிக்டர் அளவுகோலில் சக்தி வாய்ந்த பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது, கடலுக்கடியில் 9.3 கிமீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தக்காளி விற்று ஒரே மாதத்தில்

# கோடீஸ்வரர் ஆன விவசாயி!

மும்பை,ஜூலை.18-



மகாராஷ்டிராவில் ஒரு தக்காளி வியாபாரி ஒரே மாதத்தில் கோடீஸ்வரர் ஆகியிருக்கிறார்.

விண்ணை முட்டும் தக்காளி விலை காரணமாக தக்காளிகளை அதிகம் பயிரிட்டிருந்த வியாபாரிக்கு பண மழை கொட்டியுள்ளது.

இதனால் போட்டி போட்டுக்கொண்டு வியாபாரிகள் பலரும் அவரிடம் தக்காளி பெட்டிகளை வாங்கிச் சென்றனர். கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 13 ஆயிரம் பெட்டிகள் தக்காளி விற்ற துக்காராம், ஒன்றரை கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளார்.

### தமிழ்நாட்டில்

# 10 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை,ஜூலை.18-

தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், திண்டுக்கல், தேனீ, மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடியில் இரவு 7 மணி வரை லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

### இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட

# 22 மீனவர்கள் சென்னை திரும்பினர்!

சென்னை,ஜூலை.18

இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட 22 மீனவர்கள் சென்னை திரும்பினர். அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் 22ம் தேதி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள், நாகை மாவட்டத்தை சேர்ந்த 7 மீனவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 2 மீனவர்கள் என மொத்தம் 22 பேர் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# தொலைந்து போகாமல் இருக்க புதிய வழி!




பீஜிங்,ஜூலை.18-

சீனாவில் உள்ள அழகு நிலையம் ஒன்றில், மறதி (Alzheimer) நோயால் பாதிக்கப்பட்டுள்ள முதியவர்கள் தொலைந்து போனால் எளிதில் கண்டறிய உதவியாக அவர்களின் முகவரி, தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்கள் இலவசமாக பச்சை குத்தப்படுகிறது.

தொலைந்து போகும் வலியை விட, பச்சை குத்தும் வலி பெரிதல்ல என பலரும் இம்முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

# இமாசல பிரதேசத்தில் மழை-வெள்ளம்!

சிம்லா,ஜூலை.18-

இமாசல பிரதேசத்தில் மழைவெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 108ஆக அதிகரித்துள்ளது. மேலும் 12 பேர் மாயமாகியுள்ளனர்.

நிலச்சரிவு காரணமாக, 860 சாலைகளில் போக்குவரத்து தடைபட்டுள்ளது. 667 வீடுகள் முழுமையாகவும், 1,200க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இமாசல பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழை, மாநிலத்தையே புரட்டிப் போட்டுள்ளது. உயிர்ச் சேதத்துடன் பெருமளவில் உள்கட்டமைப்புச் சேதமும் ஏற்பட்டுள்ளது.

மீட்புநிவாரணப் பணிகளுக்காக, ஒன்றிய அரசிடம் ரூ.2,000 கோடி இடைக்கால நிதி கோரப்பட்டுள்ளதாக, முதல்வர் சுக்வீந்தர் சிங் சுக்கு கூறினார்.



சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள தி லீலா பேலஸில் FIO Chennai ன் 30வது ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, Pride Of FLO Chennai என்ற நூலை வெளியிட்டார். உடன், FLO தேசிய தலைவர் சுதா சிவ்குமார், FICCI தமிழ்நாடு தலைவர் ஜி.எஸ்.கே.வேலு, FLO Chennai தலைவர் ராஜி ராஜு மற்றும் பலர் கலந்து கொண்டனர்!

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## 10,100 பயனாளிகளுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கி

## கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, ஜூலை 18 -

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள், மூத்தகழக முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்கியும், 10,100 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்புரையாற்றுகிறார்.

இன்று (18.07.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 7.00 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவி லூர் ரோடு, நகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள கலைஞர் திடலில், திருவண்ணா மலை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்திற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், மாவட்ட கழக செயலாளருமான எ.வ.வேலு தலைமை வகிக்கிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர்கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ, ஒ.ஜோதி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு மூத்த கழக முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்கியும், 10,100 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் தெற்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜேந்திரன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, பொன்.முத்து, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ. தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, விஜயலட்சுமி ரமேஷ் மற்றும் கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், பாரதிராமஜெயம்,

தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனசு, எச்.சாதிக் பாஷா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மாள் யேசு, இரா.சீனிவாசன், கற்பகம் சரவணன், உ.நித்யா,

வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் என்.நரேஷ்குமார், ஏ.என்.சம்பத், என்.கே.பாபு, மா.ஏழுமலை, கே.ஏ.புஷ்பராஜ், ஏ.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு சாது. ஆனந்த், அப்சல்பாஷா, ப.க.மணிவண்ணன், இ.மணிகண் டன், பி.எஸ்.சாந்தகுமார்,

தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, எஸ்.பிரபு, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி. தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ் பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை மற்றும் ஒன்றியக்குழு, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறைவாக நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

முன்னதாக ஆக்காட்டி ஆறுமுகம் குழுவினரின் இசைநிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

### கலைஞர் நூற்றாண்டு விழா போக்குவரத்து தொ.மு.ச.

# கோத்தகிரி கிளை சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் வழங்கினார்!

உதகை, ஜூலை 18-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொ.மு.ச. கோத்தகிரி கிளை சார்பில் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தொ.மு.ச. மண்டல பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது, தொ.மு.ச. கோத்தகிரி கிளை தலைவர் ரத்தினக்குமார் வரவேற்றார்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் கலந்துகொண்டு தொ.மு.ச. தொழிற்சங்க கொடியேற்றி வைத்து, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட அவைத் தலைவர் போஜன், கோத்தகிரி ஒன்றியச் செயலாளர் நெல்லை கண்ணன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் வீரபத்தி ரன், சத்தக்கத்துல்லா, கழக மூத்த முன்னோடி ஐக்கனாரை கண்ணன், கோத்தகிரி பேரூர் செயலாளர் காளிதாஸ், கோத்தகிரி பேரூராட்சி தலைவர் ஜெயகுமாரி, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் LPF முருகன், தொ.மு.ச. மண்டல தலைவர் லூர்க்மான் ஹக்கீம், பொருளாளர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் ஜாபர், சுசில், நடுஹட்டி ஊராட்சி தலைவர் கிருஷ்ணன், அணிகளின் துணை அமைப்பாளர்கள் திருச்செல்வம், சண்முகராஜ், வின்செண்ட், சுரேஷ், கோத்தகிரி கிளை நிர்வாகிகள் மகாலிங்கம், சரவணன், குமார், எர்குலஸ், சிவப்பிரகாசம், முருகன், ஸ்டீபன், முத்துராஜா, ஆனந்தன், சந்திரன், கணேசன், மத்திய சங்க நிர்வாகிகள் நிரேஷ்குமார், யோகரத்தினம், குமார், ராமலிங்கம், மேகநாதன், ரவி, பாலசந்திரன், ராமலிங்கம், கோபாலகிருஷணன், முத்துக்குமார் உட்பட கழக செயல் வீரர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

### திருப்பத்தூர்

# கழக முன்னணி பேச்சாளர் ஆறுமுகம் மறைவு!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அஞ்சலி!

சிவகங்க, ஜூலை 18 -


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரைச் சேர்ந்த கழகப் பேச்சாளர் ஆறுமுகம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரைச் சேர்ந்தவர் ஆறுமுகம் (வயது 74) கழகத்தின் தீவிர முன்னணிப் பேச்சாளர். சிவகங்கை மாவட்டச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான பெரியகருப்பனுக்கு தேர்தலின் போது வீடு வீடாகச்சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி வாக்குகள் சேகரிப்பார்.

கழகப் பேச்சாளரான ஆறுமுகம் உடல் நலக் குறைவால் நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை மரணம் அடைந்தார். அவருக்கு இரண்டு மகன்கள் இரண்டு மகள்கள் உள்ளார்கள். மனைவி ஏற்கனவே இறந்து விட்டார்.

ஆறுமுகத்தின் உடலுக்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ்நாட்டு பாடநூல் சேமிப்பு கழக தலைவர் திண்டுக்கல் லியோனி, திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.சண்முக வடிவேல், பேருர்கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் உட்பட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

## முதன்மை முதல்வரின் அறிவுப் புரட்சி- கலைஞர் நூலகம்!



உலகளாவிய மக்களின் கண்களைத்
- திறக்கும் வாழ்வியலை
உறவாக்கிச் சிந்திக்க வைக்கும் கருவூலமாய்
நலமுறவே தமிழ்நாட்டு மக்களின்
இதயத்தைத் - தெளிவாக்கியே
நன்னூற்கள் திறவுகோல் அகத்தொளி
பிறப்பிப்பதாய்
நிலத்தமிழ்நம் மொழியினம் மீட்டெடுத்த
தளபதியார் - கலைஞருக்கே
நிகரில்லா அறிவுப்புரட்சி திராவிட
மாதிரி ஆக்கிப்புலனறி இயக்கம் கலைஞர் நூலகம்
மாமதுரை - கண்டனரே
போற்றுதுமே காலம் வென்று தலை
முறைகள் நிலைபெறுமே



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர்
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்.



விருதுநகர் மற்றும் சாத்தூரில் அமைந்துள்ள, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளை, மேம்படுத்துவது குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.